**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.248/2025
Sessions)

( Prosecution P.W.1
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | சோலை முருகன் | -- | |
| Father's Name | சொக்கலிங்கம் | Calling | கூலி |
| Village | வைத்தியலிங்கபுரம் | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th day of September 2025.

**முதல் விசாரணை**

நான் திருவில்லிபுத்தூர் தாலுகா வைத்தியலிங்கபுரம், மாரியம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். ராஜபாளையத்திலுள்ள ராம்கோ மில்லில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன குருநாதன் எனது உடன் பிறந்த அண்ணன் ஆவார். அவருடைய மனைவி முத்துமாரி சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துபோய்விட்டார். எனது அண்ணன் குருநாதன் கேபிள் டிவி வேலை பார்த்து வந்தார். நான் 08.07.2023 ம் தேதி மாலையில் இரவு சுமார் 09.00 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்தபோது எனக்கு தெரிந்த கணேசன் என்பவர் போன் மூலமாக என்னிடம் எனது அண்ணன் குருநாதனுக்கு திருவில்லிபுத்தூர் செல்லும் வழியில் உள்ள விஷ்ணு பழக்கடை அருகில் வைத்து ஈச்சர் என்ற வாகனம் மோதி விபத்து ஏற்படுத்திவிட்டதாக என்னிடம் தெரிவித்தார். நான் உடனடியாக இரவு 09.30 மணியளவில் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை சென்று எனது அண்ணனை பார்த்தேன். அவர் மயக்க நிலையில் இருந்தார். வலது கால், வலது தோள்பட்டை, வலது பக்க தலை ஆகியவற்றில் அடிப்பட்டும் உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்களும் இருந்தது. எனது அண்ணனுக்கு மோசமான நிலையில் இருந்ததால் அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் கொண்டு சென்றார்கள். நானும் உடன் சென்றேன். அங்கு சிகிச்சை பலனின்றி மறுநாள் காலை 06.30 மணியளவில்எ னது அண்ணன் இறந்துபோய்விட்டார். இது சம்பந்தமாக நான் வன்னியம்பட்டி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். நான் கொடுத்த **புகார் மனு அசாஆ 1** ஆகும். எனது அண்ணன் மீது மோதிய விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தவர் விஜயன் என்று தெரிந்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th day of September 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**